முதுகலை முதலாமாண்டு - தமிழ் இலக்கியம்

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - இரண்டாம் பருவம்

பாடக்குறியீட்டு எண் - 18MTA22C

அலகு 4 : இயல் 6 - வினையியல்
இயல் 7 - இடையியல்
இயல் 8 - உரியியல்

முனைவர். ந. மகாலட்சுமி
உதவிப்பேராசிரியர்.

# இயல் 6 - வினையியல்

ஒரு செயல் அல்லது ஒன்றன் இயக்கமே வினை எனப்படும். வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல். வினைச் சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்காது. குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காலத்தைக் காட்டும். ~~காலம்~~ இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என காலம் மூன்று வகைப்படும்.

## வினைச் சொற்களின் வகைகள்

1. உயர்திணைக்கு உரியன, 2. அஃறிணைக்குரியன, 3. இருதிணைக்கும் பொதுவான ஏவல்வினைக்கு உரியன என மூன்று வகைகளில் அமையும்.

வெளிப்படையாகக் காலம் காட்டும் வினைச்சொல் தெரிநிலை வினை. குறிப்பாகக் காலம் காட்டும் வினைச்சொல் குறிப்புவினை எனப்படும்.

## 1. உயர்திணை வினைகள்

### தன்மை பன்மை வினைமுற்று

அம், ஆம், எம், ஏம், ஓம், டும், தும், றும் எனும் எட்டையும் இறுதியில் உடைய சொற்கள் தன்மை பன்மை உணர்த்தும் வினைமுற்றுக்கள்.

### தன்மை ஒருமை வினைமுற்றுக்கள்

கு, டு, து, று, என், ஏன், அல் என்பனவற்றை ஈற்றில் கொண்ட சொற்கள் தன்மை ஒருமை உணர்த்தும் வினைச் சொற்களாகும்.

மேற்கூறியவற்றுள் செய்கு எனும் வாய்ப்பாட்டு வினைமுற்று பெயரைக் கொண்டு முடியாமல் வேறொரு வினையைக் கொண்டு முடிந்தாலும் அது முற்றுவினை ஆகும்.

### படர்க்கை ஒருமை வினைமுற்றுக்கள்

அன், ஆன், அள், ஆள் எனும் விகுதிகளை உடைய சொற்கள் படர்க்கை ஒருமை உணர்த்தும் வினைச்சொற்கள்.

### படர்க்கை பன்மை வினைமுற்றுக்கள்

அர், ஆர், ப என்னும் மூன்றினையும் இறுதியில் உடைய சொற்கள் பன்மை உணர்த்தும் சொற்கள் ஆகும். மார் என்பதை இறுதியாகப் பெற்று வினையைக் கொண்டு முடிந்து வரும் சொல்லும் படர்க்கைப் பன்மையை உணர்த்தும்.

## உயர்திணைக்குரிய வினைமுற்றுக்கள்

மேற்கூறப்பட்ட 23-ம்.

அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும், கு, டு, து, று, என், ஏன், அல், அன் ஆன் அள் ஆள், அர், ஆர், ப, மார் என்பன.

உயர்திணைப் பன்மையை உணர்த்தும் தன்மை வினைமுற்று எண்ணுப்பொருளில் வரும் போது அஃறிணையைச் சார்ந்து வருவதும் உண்டு.

- வினைப் பொருளை உணர்த்தும் 'யார்' எனும் குறிப்பு வினைமுற்றுச் சொல் உயர்திணையாள் ஆண், பெண், பலர் எனும் மூன்று பால்களுக்கும் உரியது.
- ஆன், ஆள், ஆர் எனும் மூன்று ஈறுகளும் உயர்திணையாள் தெளிவாகப் பால் உணர்த்துவன. இவை செய்யுளில் வரும்போது இவற்றில் உள்ள 'ஆ'காரம் 'ஓ'காரமாகத் திரியும்.
- முன்னிலை ஈற்றிற்குரிய 'ஆய்' எனும் சொல்லிலுள்ள 'ஆ'காரமும் செய்யுளில் ஓ காரமாகத் திரியும்.

### குறிப்பு வினைமுற்று:

- ஆறாம் வேற்றுமைக்குரிய உடைமைப்பொருள், ஏழாம் வேற்றுமைக்குரிய நிலப்பொருள், ஒப்பு, பண்பு ஆகிய பொருட்களை அடிப்படையாக கொண்டு குறிப்பு வினை தோன்றும். இது காலத்தைக் குறிப்பாக உணர்த்தும்.
- அன்மை, இன்மை, உண்மை வன்மை எனும் சொற்களும், இவற்றைப் போலக் குறிப்புப் பொருளில் வரும் எல்லாச் சொற்களும் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் குறிப்பு வினைமுற்றுக்கள்.
- பன்மையும் ஒருமையும் தெளிவாகத் தெரியுமாறு விளக்கிக் காலத்தைக் குறிப்பாகக் காட்டுவது குறிப்பு வினைமுற்று. இது தெரிநிலை வினைமுற்றுக்குக் கூறப்பட்ட ஈறுகளைப் பெற்று வரும்.

## 2. அஃறிணை வினை

### பன்மை வினைமுற்று

அ, ஆ, வ எனும் மூன்றையும் இறுதியாக உடைய வினைச் சொற்கள் அஃறிணைப் பலவின் பால் படர்க்கையை உணர்த்தும்.

### ஒருமை வினைமுற்று

து, று, டு எனும் குற்றியலுகர ஈறுகளை இறுதியாக உடைய சொற்கள் ஒன்றன்பால் படர்க்கை உணர்த்துவன.

## அஃறிணை வினைமுற்றுக்கள்

- அ, ஆ, வ, து, று, டு என்ற அஃறிணையும் ஈறாகக் கொண்ட சொற்கள் அஃறிணைத் தெரிநிலை வினைமுற்றுக்கள்
- எவன் எனும் குறிப்பு வினைமுற்று அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் இரண்டிற்கும் பொருந்தி வரும்.
- இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல எனும் சொற்கள் பண்பினை உணர்த்தும் சொல், உள எனும் சொல், பண்பினை உணர்த்தி வரும் சினைமுதற் சொல், ஒப்புமைப் பொருளில் வரும் சொல் எனும் பத்தும் அஃறிணைக் குறிப்பு வினை முற்றுக்கள்.
- அஃறிணைத் தெரிநிலை முற்றுக்குக் கூறிய ஈறுகள் குறிப்பு வினைமுற்றிற்கும் பொருந்தி வரும்.

## 3. விரவு வினைகள்

முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, வினையெச்சம், இல்லை, வேறு எனும் சொற்கள், செய்ம்மன, செய்யும், செய்த எனும் வாய்ப்பாட்டு வினைச்சொற்கள் எனும் எட்டுச் சொற்களும் இருதிணைப் பொதுச்சொற்கள். இவை அப்பொதுத்தன்மையிலிருந்து விலகி ஒரு நேரம் உயர்திணையையும், இன்னொரு நேரம் அஃறிணையையும் உணர்த்தும் வேறுபட்ட தொழில் உடையனவாய் வரும்.

### முன்னிலை ஒருமை வினைமுற்று

மேற்கூறியவற்றில் இ, ஐ, ஆய் எனும் மூன்று ஈறுகளையும் உடைய முன்னிலை வினைமுற்றுச் சொற்கள் ஒருமைக்கு உரியனவாகும்.

### முன்னிலை பன்மை வினைமுற்று

இர், ஈர், மின் எனும் ஈற்றுச் சொற்கள் முன்னிலைப் பன்மைச் சொற்களாகும். அவை உயர்திணைப் பலர்பாலுக்கும் அஃறிணைப் பலவின் பாலுக்கும் பொதுவாக வரும்.

### முன்னிலை ஒழிந்த விரவு வினைகள்

முன்னிலை வினைதவிர கூறப்பட்ட விரவு வினைகள் ஏழு. அவை தத்தம் பொருட்களில் வரும்போது ஐம்பால், மூவிடத்திற்கும் பொதுவாக வரும்.

## வியங்கோள் வினைமுற்று

வியங்கோள் வினைமுற்று தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களிலும் வராது. படர்க்கையில் வருவதே பெரும்பான்மை.

## செய்யும் எனும் வினை

நிகழ்காலத்தை உணர்த்தும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று பலர்பால் படர்க்கை, தன்மை, முன்னிலை ஆகிய மூன்று இடங்களிலும் வருவதில்லை.

# வினையெச்சம்

வினையைக் கொண்டு முடிகின்ற எச்சச்சொல் வினையெச்சம் எனப்படும். வினை என்பது செயல். வினையெச்ச வாய்பாடுகளும் செய் என்பதை அடிப்படையாக வைத்தே அமைகின்றன.

## வினையெச்ச வாய்பாடுகள்

- செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்ய, செயின், செய, செயற்கு எனும் ஒன்பது வாய்பாட்டுச் சொற்களும் வினையெச்சச் சொற்கள்.
- பின், முன், கால், கடை, வழி, இடம் என்பவற்றை ஈற்றில் கொண்ட சொற்களும் இவற்றைப் போல காலம் பொருந்தி வருவனவும் ஆகிய அனைத்தும் வினையெச்சச் சொற்கள்.
- மேற்கூறப்பட்ட வினையெச்ச வாய்பாடுகளில் செய்து, செய்யூ, செய்பு என்பன தம் வினை முதலின் வினையைக் கொண்டு முடியும்.
- செய்து, செய்யூ, செய்பு எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள் சினையின் வினையாக வரும் போது சினை வினையோடு முடிய வேண்டும். அவ்வாறின்றி முதல் வினையோடு முடிந்தாலும் கொள்ளப்படும்.

## தன்வினை பிறவினை கொண்டு முடியும் எச்சங்கள்

மேற்கூறப்பட்ட மூன்று நீங்கலாக அமைந்த ஏனைய வினையெச்சங்கள்,

1. தம் வினைமுதலின் வினையைக் கொண்டு முடியும்.
2. அந்த இடத்திற்குப் பொருந்துகின்ற பிற வினைக்குரிய வினையைக் கொண்டு முடியும்.

## வினையெச்சங்கள் அடுக்கி முடிதல்

பல வேறு வினையெச்சச் சொற்களும் தனித்தனி வினையைக் கொண்டு முடிவதே முறையாகும். அவ்வாறின்றி வினையெச்சச் சொற்களில்

ஒரு வகை வாய்ப்பாட்டுச் சொற்கள் பலமுறை தொடர்ந்தும், பலவகை வாய்ப்பாட்டுச் சொற்கள் பலமுறை தொடர்ந்தும் வருவது உண்டு. அவ்வாறு அடுக்கி வரும் போது இறுதியில் நிற்கும் எச்சம் ஒருவினை கொண்டு பொருள் முடியும். அப்போது ஏனைய எச்சங்களும் பொருள் முடிந்தனவை ஆகும்.

## பெயரெச்சம்

### பெயரெச்ச வாய்பாடுகள்

செய்யும், செய்த எனும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சச் சொற்கள், நிலம், பொருள், காலம், கருவி, வினைமுதல், வினை எனும் ஆறு பெயர்களையும் கொண்டு முடியும்.

மேற்கூறப்பட்ட நிலம் முதலாகிய அறுவகைப் பெயரையும் கொண்டு முடியும் செய்யும் எனும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம், பலர்பால், படர்க்கை, தன்மை, முன்னிலை ஆகிய மூன்றிடங்களிலும் வரும்.

### எதிர்மறையில் பெயரெச்சமும் வினையெச்சமும்

பெயரெச்சமும் வினையெச்சமும் எதிர்மறைப் பொருளில் வரும் போதும் தத்தமக்குரிய எச்சப் பொருளில் மாறுபடாமல் வரும். அதாவது பெயரெச்சம் பெயரைக் கொண்டும், வினையெச்சம் வினையைக் கொண்டும் முடிந்து வரும்.

- எச்சச் சொல்லிற்கும் அதைக் கொண்டு முடிந்து வரும் சொல்லிற்கும் இடையில் பொருத்தமான பிறசொற்கள் வருவதும் உண்டு. இது இடைபிறவரல் எனப்படும். எ.கா) உண்டு (முருகன்) வந்தான் – வினையெச்சம்.
- செய்யும் என்னும் பெயரெச்சத்தின் ஈற்றயலில் நிற்கும் உகரம் தான் ஏறிய மெய்யெழுத்துடன் சேர்ந்து சில இடங்களில் கெடும். (எ.கா) வாவும் பரி – வாம்பரி

### கால வழுவமைதி

- இறந்த காலத்தை உணர்த்தும் செய்து என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம், எதிர்காலத்தை உணர்த்தும் வினைச்சொல்லோடு சேர்ந்து வருவதும் உண்டு.
- மூன்று காலத்திலும் மாற்றம் இன்றிப் பொதுவாய் வரும் இயல்பினை உடைய பொருள்கள் உள்ளன. அவற்றின் இயல்பினை நிகழ்காலத்துக்குரிய செய்யும் என்னும் வாய்பாட்டுப் பொதுச்சொல்லால் கூற வேண்டும்.
- எதிர்காலம், நிகழ்காலம் இரண்டிற்கும் பொதுவாக வரும் வினைச்சொற்களை விரைவு காரணமாகக் கூறும் போது இறந்தகாலத்திற்குரிய வினைச் சொல்லால் கூறுவது மரபு.
- உலகத்தாரால் நன்கு மதிக்கப்படுகின்ற சிறந்த வினையின் பயனைக் கூறும் போது, வினையைச் செய்தவரின் பெயரைச் சுட்டிச் சொல்லவில்லை என்றால் நிகழ்காலத்தில் சொல்வதே முறையாகும். அப்பெயரைச் சேர்த்துச் சொல்கின்ற போது எதிர்காலத்திலோ இறந்தகாலத்திலோ சொல்ல வேண்டும்.

- இச்செயலைச் செய்ய வேண்டும் எனும் வாய்ப்பாட்டில் வரும் வினைமுற்று இரு பொருள்பட வரும். அதாவது அதைச் சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் ஒத்த பொருளில் வரும்.
- வினைச்சொல் வற்புறுத்திக் கூறுவதற்கான பொருளில் அமைந்த வினையாக வருமானால் அது வினையுடை வினைச்சொல் எனப்படும். அது உடன்பாட்டுப் பொருளை உணர்த்தாமல் எதிர்மறைப் பொருளை உணர்த்தியும் வரும்.
- எதிர்காலத்திற்குரிய வினைச் சொல்லால் கூறப்பட வேண்டிய ஒருபொருளின் இயல்பு மற்றும் இது என்று துணியப்பட்ட தெளிவுப் பொருள் ஆகியவை இறந்தகாலம் மற்றும் நிகழ்காலச் சொற்களால் கூறப்படுவதும் உண்டு.
- செயப்படுபொருளை வினை முதலாகக் கொண்டு அதன் மேல் வினையை ஏற்றிக் கூறுதலும் உண்டு. இது உலக வழக்கத்திற்கு உரியது.
- இறந்தகாலமும் எதிர்காலமும் தம்முள் மயங்கி வரும்.
(எ.கா) நாளை விளையாடுவோர். நேற்று விளையாடினார் என வர வேண்டும்.
- இறந்தகாலமும், எதிர்காலமும் மயங்குவது போல நிகழ்காலமும் மயங்கி வரும்.
(எ.கா) உன்னுடன் நாளை பேசுகிறேன்.

# இயல் 7 - இடையியல்

## இடைச்சொல்லின் பொது இலக்கணம்:

இடைச்சொற்கள் பெயரைச் சார்ந்து பெயர்ப் பொருளையும், வினையைச் சார்ந்து வினைப் பொருளையும் உணர்த்தும். அவை தனித்து நின்று பொருள் தரும் இயல்பு உடையன அல்ல.
(எ.கா) அது கொல் தோழி, வருகதில் அம்ம.

## இடைச் சொற்களின் பாகுபாடு

1. இரு சொற்களின் புணர்ச்சியின் போது அவற்றின் பொருள் விளங்க உதவுவன.
2. வினைச் சொற்களில் காலம் காட்டும் உருப்பாய் வருவன.
3. வேற்றுமைப் பொருளை உணர்த்த உருபாய் வருவன.
4. தமக்கெனப் பொருளின்றித் தாம் சார்ந்த பொருளை வேறுபடுத்தி வருவன.
5. செய்யுளில் இசைநிறைத்தல் பொருளில் வருவன.
6. சொல்பவனின் குறிப்பால் தரும் பொருள் உணர்த்துவன.
7. ஒப்புமைப் பொருளில் வரும் உவம உருபுகள்.

## இடைச்சொற்கள் நிற்குமிடமும் வேறுபாடும்

இடைச்சொற்கள் தாம் சார்ந்து வரும் சொல்லின் முன்னும் பின்னும் வரும். எழுத்து திரிந்து வரும். ஓர் இடைச்சொல் வேறொரு இடைச்சொல்லுடன் இணைந்தும் வரும்.
(எ.கா) கொன்னூர், அதுமன், போகுகதில்ல, வருகதில் அம்ம.

## இடைச்சொற்களின் பொருள்கள்

மன் - கழிவு, ஆக்கம், ஒழியிசை.
தில் - விழைவு, காலம், ஒழியிசை
கொன் - அச்சம், பயமில, காலம், பெருமை.
உம் - எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம்.
ஓ - பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு.
ஏ - தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை.
என - வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர்.
என்று - வினை குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர்
மற்று - வினைமாற்று, அசைநிலை
எற்று - கழிந்து போனது
மற்றையது - ஒன்றைச் சுட்டுவதோடு மட்டுமல்லாமல் அதற்கு இணையான பொருளைக் குறித்தும் வரும்.

மன்ற - தெளிவு

தஞ்சம் - எளிமை

அந்தில் - ஆங்கு, அசைநிலை.

கொல் - ஐயப் பொருள்

எல் - இலங்குதல்

ஆர் - இயற்பெயரின் முன்னர் சேர்ந்து வரும்.

ஏ, குரை - இசை நிறைத்தல், அசைநிலை.

மா - வியங்கோளைச் சார்ந்து அசை நிலையாய் வரும்.

## முன்னிலை அசைச்சொற்கள்

மியா, இக, மோ, மதி, இகும், சின் எனும் ஆறு அசைச்சொற்களும் முன்னிலை இடத்திற்கு மட்டும் உரியனவாகும்.
இகும், சின் எனும் இரண்டும் தன்மை, படர்க்கை இடங்களிலும் வரும்.

அம்ம - நான் கூறுவதைக் கேள் என்று கூறும் பொருளில் வரும்.

ஆங்க - அசைநிலையாய் வரும்.

## ஒப்பில் போலி

ஒப்புமையை உணர்த்தாமல் வரும் போலும் எனும் சொல் 'ஒப்பில் போலி' எனப்படும். இது உரையசையாக வரும்.

## அசைநிலைச் சொற்கள்

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது எனும் ஏழு சொற்களும் அசைநிலைகளாகும்.

## பிரிவில் அசைநிலைச் சொற்கள்

ஆக, ஆகல், என்பது எனும் மூன்று இடைச்சொற்களும் அசைநிலையாய் வரும் போது தனித்து வருவதில்லை. இரட்டித்தே வரும்.

## ஔ இடைச்சொல்

ஔகாரம் இரண்டு மாத்திரையுடையது. தனித்து மொழிக்கு ஈ.றாகாது. இது மேற்கூறிய அசைநிலைச் சொற்களைப் போல 1. இரட்டித்து நிற்கும் 2. அளபெடையாகவும் வரும் 3. அளபெடை இன்றி தனித்தும் வரும். மூன்று இடங்களிலும் பொருள் வேறுபடும். அப்பொருள் வேறுபாடு சொல்பவனின் ஓசை வேறுபாட்டால் புலப்படும்.

## குறிப்பால் பொருள் உணர்த்துவன

நன்றே அன்றே அந்தோ அன்னோ என ஏகாரத்தோடும் ஓகாரத்தோடும் கூடி வரும் சொற்களும் அவற்றைப் போன்ற பிற இடைச்சொற்களும் கூறுவோனின் குறிப்பினால் பொருள் உணரப்படும்.

## ஈற்றசை ஏகாரம்

செய்யுளின் இறுதியில் ஈற்றசையாக வரும் ஏகாரம் பொருத்தமாகக் கூறப்படும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒரு மாத்திரையாயும் ஒலிக்கும்.

## எண்ணிடைச் சொற்கள் தொகை பெற்றும் பெறாமையும்

'உம்' 'என' எனும் இரண்டும் எண்ணுப் பொருள் குறித்து வரும் இடைச்சொற்கள். இவ் எண்ணிடைச் சொற்கள் தொகை பெற்றும் பெறாமலும் வரும்.

எண்ணிக்கையைக் குறித்து வரும் ஏகாரம் எண்ணேகாரம். அது சொல்தோறும் வராமல் இடையிடையே மட்டும் வருவதும் உண்டு. அவ்வாறு வரினும் அது எண்ணிக்கையைக் குறித்து வந்ததாகவே கொள்ளப்படும்.

உம் மறைந்து நிற்கும் எனா எனும் சொல்லும், ஆகாரம் பெற்று வரும் என்றா எனும் ஆகார ஈற்றுச் சொல்லும் சொல்தோறும் நின்று எண்ணுப் பொருள் தரும்.

## தொகை பெற்று வரும் எண்ணிடைச் சொற்கள்

எனா, என்றா என்பவற்றின் இறுதி, இடைச் சொல்லால் அன்றி பெயரால் எண்ணப்படும். செவ்வெண் இறுதி, ஏகார இறுதி ஆகியவை எண்ணுப் பொருளில் வரும் போது தொகை பெறாமல் வராது

## எண்ணும்மையால் உருபு

எண்ணும்மையால் வேற்றுமை உருபுகள் மறைந்து வரும்.

## வினையால் எண்ணிடைச் சொற்கள்

மேற்கூறிய எண்ணிடைச் சொற்கள் பெயரோடு அன்றி வினையோடு சேர்ந்து வருவதுண்டு. அப்போதும் எண்ணுப் பொருண்மையிலிருந்து மாறுவதில்லை.

## எண்ணிடைச் சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல்

ஒரு தொடரில் ஓரிடத்தில் நிற்கும் என்று, என, ஒடு எனும் எண்ணிடைச்சொற்கள் எண்ணுகின்ற போது வேறொரு இடத்தில் சென்று பொருந்துவதும் உண்டு.

## இடைச் சொற்களுக்குப் பொருள் கொள்ளுதல்

மேற்கூறப்பட்ட இடைச்சொற்கள் இன்னின்ன பொருள்களில் வரும் என வரையறுத்துக் கூறப்பட்டன. அவை முன்னும் பின்னும் நிற்கும் பெயரோடும் வினையோடும் நோக்கி ஆராய்ந்தால் வேறு பொருள்களையும் தரும். அசைநிலையாக வருவதும், திரிந்து வருவதும் உண்டு. அவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வியலில் கூறப்பட்டன அன்றி அவை போன்ற பிறவும் இடைச்சொற்களாக வரலாம். அவற்றையும் மேற்கூறப்பட்ட இலக்கணத்தால் ஆராய்ந்து பொருத்தமானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

---

# 8. உரியியல்

செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வருவன உரிச்சொற்கள். இவை இசை, குறிப்பு, பண்பு, எனும் பொருள் உணர்த்துவதற்குத் தாமே உரிமை உடையனவை ஆனதால் உரிச்சொல் என்று பெயர்பெற்றது எனலாம். இவை எளிதில் பொருள் விளங்காதன. ஆகையால் உரிச்சொற்களை ஒரு சொல் ஒருபொருள் உணர்த்துவன, ஒரு சொல் பல பொருள் உணர்த்துவன, பல சொல் ஒரு பொருள் உணர்த்துவன என மூன்றாகப் பகுக்கலாம்.

## உரிச்சொல்லின் பொது இலக்கணம்

உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றும். பெயர் போலவும் வினை போலவும் அமைந்து இரண்டும் ஆவதற்கு உரிமை உடையதாய்த் தம் பகுதிகள் திரிந்து தோன்றும். உரிச்சொற்களின் பொருள் கொள்ளும் போது அறியாத சொல்லை அறிந்த சொல்லுடன் தொடர்புபடுத்தி பொருளை உணர்தல் வேண்டும். உரிச்சொற்கள் தமக்குரிய இயல்பில் நின்று, தாம் சார்ந்து நிற்கும் பெயரையும், வினையையும் அடிப்படையாகக் கொண்டு வேறுவேறு பொருட்களை உணர்த்தும்.

## உரிச்சொற்களின் இயல்பு:

வெளிப்படையாகப் பொருள் விளங்கும் உரிச்சொற்களைக் கூற வேண்டியத் தேவையில்லை. எனவே, வெளிப்படையாய்ப் பொருள் உணர முடியாத உரிச்சொற்களுக்கே இங்குப் பொருள் கூறப்படுகின்றது.

| | உரிச்சொல் | பொருள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| 1. | உறு | மிகுதி | உறுபுனல் தந்துலகூட்டி. |
| | தவ | | எஃயாது வீயும் உயர்தவப் பலவே. |
| | நனி | | நனிவருத்தினை வாழியென் நெஞ்சே. |
| 2. | உரு | உட்கு (அச்சம்) | உருகெழு கடவுள் |
| | புரை | உயர்வு | புரையோர் கேண்மை |
| 3. | குரு | நிறம் | குருமணித் தாலி |
| | கெழு | | செங்கேழ் மென்கொடி. |
| 4. | செல்லல் | இன்னாமை (துன்பம்) | மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல் |
| | இன்னல் | | வெயில் புறந்தருஉம் இன்னல் இயக்கம். |

| | உரிச்சொல் | பொருள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| 5. | மல்லல் | வளம் | மல்லல் மால்வரை |
| 6. | ஏ | பெற்று (பெருக்கம்) | ஏகல் அடுக்கம். |
| 7. | உகப்பு<br>உவப்பு | உயர்தல்<br>உவகை (மகிழ்ச்சி) | விசும்புகந்து ஆடாது<br>உவக்குநனாயினும் ஊடுநனாயினும் |
| 8. | பயப்பு | பயன் | அன்பயமுந் தூக்கினன் |
| 9. | பசப்பு | நிறம் (பசலை) | பசப்பித்துச் சென்றார். |
| 10. | இயைபு | புணர்ச்சி | இயைந்தொழுகும். |
| 11. | இசைப்பு | இசை | இசைந்தொழுகும். |
| 12. | அலமரல்<br>தெருமரல் | சுழற்சி | அலமரல் ஆயம்<br>தெருமரலுள்ளம் |
| 13. | மழ<br>குழ | இளமை | மழக்களிறு<br>குழக்கன்று |
| 14. | சீர்த்தி | மிகுபுகழ் (பெரும்புகழ்) | வயக்கஞ்சால் சீர்த்தி. |
| 15. | மாலை | இயல்பு | இரவரன் மாலை. |
| 16. | கூர்ப்பு<br>கழிவு | உள்ளது<br>சிறந்தது | உப்புக் கூர்ந்தது<br>உப்புக் கழிந்தது |
| 17. | கதழ்வு<br>துனைவு | விரைவு | கதழ்பரி நெடுந்தேர்.<br>துனைபறை நிவக்கும் புள்ளினமான். |
| 18. | அதிர்வு,<br>விதிர்ப்பு | நடுக்கம் | அதிர்கண் முரசம்<br>விதிர்ப்புறுக் கண்ணிமையார். |
| 19. | தீர்தல்<br>தீர்த்தல் | விடுதல் | ஊரின் தீர்ந்தான்<br>தீங்கு தீர்ந்தான் |
| 20. | கெடவரல்,<br>பண்ணை | விளையாட்டு | கெடவரல் ஆயமொடு<br>பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும். ~~[illegible]~~ |

| | | | |
|---|---|---|---|
| 21. | தட<br>கய<br>நளி | பெருமை | தடந்தோள்<br>கயவெள்ளருவி,<br>நளிமாலை நாடன். |
| 22. | தட | கோட்டம் (வளைவு) | தடமருப்பு எருமை. |
| 23. | கய | மென்மை | கயந்தலை மடப்பிடி |
| 24. | நளி | செறிவு (நெருக்கம்) | நளியிருள். |
| 25. | பழுது | பயம் இல்லாமை | பழுதே வந்தார். |
| 26. | சாயல் | மென்மை | சாயல் மார்பு |
| 27. | முழுது | எஞ்சாமை (முழுமை) | மண்முழுது ஆண்ட |
| 28. | வம்பு | நிலையின்மை | வம்பு நாரை. |
| 29. | மாதர் | காதல் | மாதர் நோக்கு. |
| 30. | நம்பு<br>மே | நசை (விருப்பம்) | நயந்து நாம்விட்ட நன்மொழி நம்பி,<br>பேரிசை நவிர மேஎ உறையும். |
| 31. | ஓய்தல்<br>ஆய்தல்<br>நிழத்தல்<br>சாஅய் | உள்ளதன் நுணுக்கம். | ஓய்கலை ஒருத்தல்.<br>கையு மெய்யுமாய்ந்திருந்தார்.<br>நிழத்த யானை மேய்புலம் படர<br>கயலறலெதிரக் கடும்புனற் சாஅய். |
| 32. | புலம்பு | தனிமை | புலம்பு விட்டிருந்தார் |
| 33. | துவன்று | நிறைவு | ஆரியர் துவன்றிய பேரிசை இமயம் |
| 34. | முரஞ்சல் | முதிர்வு | சூல் முரஞ் செழிலி |
| 35. | வெம்மை | வேண்டல் (விரும்புதல்) | நீ வெம்மையன். |
| 36. | பொற்பு | பொலிவு | அணிகலம் பொற்ப |
| 37. | வறிது | சிறிது | வறிது வடக்கிறைஞ்சிய |
| 38. | ஏற்றம் | நினைவு<br>துணிவு | ஏற்றத்திருந்தார். (நினைவு)<br>யான் ஏற்றம் இல்லாதேன். (துணிவு) |
| 39. | பிணை<br>பேண் | பெட்பு (பாதுகாத்தல்) | அரும்பிணை அகற்றி வேட்ட ஞாட்பினும்.<br>பேணினென் அல்லனோ மகிழ்ந. |
| 40. | பணை | பிழைத்தல் (தவறுதல்)<br>பெருப்பு (பருத்தல்) | பணைத்துப் போய் வீழ்ந்தது.<br>பணைத்தோள். |

| | | | |
|---|---|---|---|
| 41. | படர் | உள்ளல் (நினைத்தல்)<br>செலவு (செல்லுதல்) | படர்மலை வைப்பர்<br>ஆறு படர்ந்தார். |
| 42. | பையுள்<br>சிறுமை | நோய் | பையுள் மாலை<br>சிறுமை உறுபவோ செய்பறி |
| 43. | எய்யாமை | அறியாமை | எய்யா மையலை |
| 44. | நன்று | பெரிது | நன்றும் அரிதுற்றனை யாம் பெரும. |
| 45. | தா | வலிமை<br>வருத்தம் | தாவல் நன் பொன் (வலிமை)<br>கடுங்கண் தாக்கலை (வருத்தம்) |
| 46. | தெவ் | கொள்ளுதல் | நீர்த்தெவ் நிரைத் தொழுவர் |
| 47. | தெவ்வு | பகை | தெவ்வு புலம். |
| 48. | விறப்பு<br>உறப்பு<br>வெறுப்பு | செறிவு. | |
| 49. | வெறுப்பு | அஞ்சுதல் | அவலெறி உலக்கைப் பாடுவிறந்த அயல |
| 50. | கம்பலை<br>கம்மை<br>கலி<br>அழுங்கல் | அரவம் (ஓசை) | கம்பலை மூதூர்<br>ஊர் கம்மையுடைத்து<br>கலிகெழு மூதூர்<br>அழுங்கல் மூதூர் |
| 51. | அழுங்கல் | இரக்கம், கேடு | மகனை இழந்து அழுங்கினார். |
| 52. | கழும் | மயக்கம் | கழுமிய ஞாட்பு |
| 53. | செழுமை | வளன்<br>கொழுப்பு | செழுஞ்செந்நெல்<br>கொழுந்தடி தின்ற செந்நாய். |
| 54. | விழுமம் | சீர்மை<br>சிறப்பு<br>துன்பம் | விழுமியோர் சீர்மை<br>விழுமமுற்றிருந்தார்.<br>நின்னுறு விழுமம் களைந்தோன் |
| 55. | கருவி | தொகுதி | கருவி வானம் |
| 56. | கமம் | நிறைவு | கமஞ்சூழ் மாமழை |
| 57. | அரி | மென்மை | அரிமயிர்த் திரள்முன்கை. |
| 58. | கவவு | அகத்திடுதல் | கொடும்பூண் கவைஇய கோல மார்பு |
| 59. | இரங்கல் | கழிந்ததற்கு வருந்துதல் | செய்து இரங்கா வினை. |
| 60. | இலம்பாடு<br>ஒற்கம் | வறுமை | இலம்படு புலவர்<br>ஒரு ஒற்கம் தீர்க்கும். |

| | | |
|---|---|---|
| 61. ஞெமிர்தல் / பாய்தல் | பரந்துபடுதல் | பாய்புனல் |
| 62. கவர்வு | விருப்பம் | கவர்நடைப்புரவி. |
| 63. சேர் | திரட்சி | சேர்ந்து செறி குறங்கு |
| 64. வியல் | அகலம் | வியல் உலகம் |
| 65. பே / நாம் / உரும் | அச்சம் | பேஎ முதிர்கடவுள் / நாம நல்லரா / உருமில் சுற்றம் |
| 66. வய | வலிமை | வாள்வரி வேங்கை வயப்புலி |
| 67. வாள் | ஒளி | வாள்முகம் |
| 68. துயவு | அறிவு வேறுபாடு | அறிவு துயவுற்றார். |
| 69. உயர் | உயர்வு | பருந்திருந்து உயாவிளி பயிற்றும் |
| 70. உசா | ஆராய்தல் | உசாத்துணை. |
| 71. வயா | மிகுந்த விருப்பம் | கடுங்கண்டு வயாவினர். |
| 72. கறுப்பு / சிவப்பு | வெகுளி (சினம்) | கறுத்து வந்தார் / சிவந்து நோக்கினார். |
| 73. நொசிவு / நுழைவு / நுணங்கு | நுண்மை | நொசி மருங்குல் / நுழை மருங்குல் / நுணங்கு மருங்குல் |
| 74. புனிறு | அண்மையால் ஈன்றது | புனிற்று ஆபாய்ந் தெனக் கலங்கி |
| 75. நனவு | அடுகளம் / அகலம் | நனவுப்புகு விறலியர் தோன்றும் நாடன் / நனந்தலை உலகு. |
| 76. மத | மடமை / வலிமை / மிகுதி / வனப்பு (அழகு) | மதவுநடை நல்லான் / மதகளிறு / மதவலி / மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே |
| 77. யாணர் | புதுவருவாய் | மீனொடு பெயரும் யாணர் ஊர |
| 78. அமர்தல் | மேவல் (விரும்புதல்) | உடனமர்ந்துண்டான் |
| 79. யாணு | கவின் அழகு | யாணது பசலை |
| 80. பரவு / பழிச்சு | வணங்குதல் | கடவுள் பரவினார் / கைதொழூஉப் பழிச்சி. |

81. கடி – வரைவு, கூர்மை, காவல், புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்தோன்றல், ஐயம், காரம்

82. ஐ – வியப்பு — ஐதே காமம் யானே

83. முனைவு – வெறுப்பு — சேற்றுநிலை முனைஇய

84. வை – கூர்மை — வைநுனை நெடுவேல்

85. எறுழ் – வலிமை — வாளுடை எறுழ்த்தோள்.

உரிச்சொற்கள் எல்லாவற்றையும் அவற்றின் முன்னும் பின்னும் வருகின்ற சொற்களை ஆராய்ந்து இடத்திற்கேற்ப பொருத்தமான பொருள் கொள்ள வேண்டும். அப்போது தான் அச்சொற்கள் தொன்று தொட்டு வழங்கி வந்த முறைப்படி தத்தமக்குரிய பொருள் விளங்கத் தோன்றும். உரிச்சொற்கள் மேற்கூறப்பட்ட பொருள்களை அன்றி வேறு பொருள் தருவதும் உண்டு. பொருளுக்குப் பொருள் காண்பது கடினம், அவசியமற்றது. கேட்பவனுக்குப் பொருள் புரியும் படி கூற வேண்டும்.

உரிச்சொல்லுக்குப் பொருள் உணர்வது உணர்பவரின் அறிவைப் பொறுத்தது. இது மரபுவழிப் பட்டது. எழுத்துக்கள் பிரிந்து நின்று வேறுபட்ட பொருள் உணர்த்தும் நிலை உரிச்சொற்களுக்குப் பொருந்தாது. இவ்வுலகில் ஏராளமான உரிச்சொற்கள் பரந்து காணப்படுகின்றன. முன்னர்க் கூறப்பட்ட இலக்கணங்களை மனதில் கொண்டு ஆராய்ந்து பார்த்துப் பொருள் உணர்தல் வேண்டும் என்பர் புலவர்.

---

## வினாக்கள்

1. தன்மைப் பன்மை வினைமுற்றுக்களைச் சுட்டுக.
2. உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்றுக்கள் யாவை?
3. உயர்திணை முப்பாலுக்கும் உரிய வினைமுற்று விகுதி யாது?
4. பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் யாவை?
5. ஏவல் என்னும் குறிப்பு வினைமுற்று உணர்த்தும் பால்கள் யாவை?
6. முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை?
7. வினைமுதல் வினைகொண்டு முடியும் எச்சங்கள் யாவை?
8. செய்யுளில் செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல் எவ்வாறு திரியும்?
9. காலம் மயங்குவதற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக?
10. திணைக் காலமும் மயங்குதல் வரையார் - விளக்குக.
11. மன் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?
12. உம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?
13. ஏகார இடைச்சொல் எவ்வப் பொருள்களைத் தரும்?
14. ஓகார இடைச்சொல்லுக்குரிய பொருள்கள் யாவை?
15. தஞ்சம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள் யாது?
16. இசைநிறை அசைநிலையாய் வரும் இடைச்சொற்கள் யாவை?
17. எண்ணுதற் பொருளில் வரும் இடைச்சொற்கள் யாவை?
18. உரிச்சொல் உணர்த்தும் மூவகைப் பொருள்கள் யாவை?
19. மிகுதிப் பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை?
20. நிறப்பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை?
21. பெருமைப் பொருள் தரும் உரிச்சொற்கள் யாவை?
22. மழ, குழ உணர்த்தும் பொருள் யாது?
23. உகப்பு, உவப்பு என்னும் உரிச்சொற்களுக்குப் பொருள் தருக.
24. பயப்பு, பசப்பு - தரும் பொருள்கள் யாவை?
25. தெவு, தெவ்வு உணர்த்தும் பொருள்கள் யாவை?
26. ஓசைப் பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை?
27. உயா, உசா - உணர்த்தும் பொருள்கள் யாவை?
28. வெகுளிப் பொருளில் வரும் உரிச்சொற்கள் யாவை?
29. மத என்னும் உரிச்சொல் எத்தனை பொருளில் வரும்.
30. நுண்மை உணர்த்தும் பெயர்கள் பால் காட்டுதலை விளக்குக.
31. உயர்திணைக் குரிய தெரிநிலை வினைமுற்றுக்கள் யாவை.
32. அஃறிணைக் குறிப்புவினை பற்றி விளக்குக.
33. காலமயக்கம் பற்றி வினையியல் கூறும் கருத்துக்கள் யாவை?
34. தத்தம் குறிப்பின் பொருள் செய்யும் இடைச்சொற்களை விளக்கி வரைக.

35. இடையியல் கூறும் அசைநிலைகள் குறித்து விளக்குக.
36. ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்களுக்குச் சான்று தருக.
37. உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை விளக்குக.
38. பலசொற்கள் ஒருபொருள் குறிப்பதைச் சான்று தந்து விளக்குக?
39. கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?
40. உரிச்சொல்லின் பொருள் அறியும் முறையை விளக்குக.
41. வினையியல் கூறும் எச்சங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
42. வினையியல் கூறும் கால வழுவமைதியைத் தொகுத்தெழுதுக.
43. விரவுவினை குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
44. இடைச்சொல்லின் பொதுஇலக்கணத்தையும் அதன் வகைகளையும் விளக்குக.
45. இடையியல் கூறும் எண்ணிடைச் சொற்கள் குறித்து ஓர் கட்டுரை வரைக.
46. உரிச்சொல்லின் பொதுஇலக்கணத்தையும் அதன் வகைகளையும் அவை பொருளுணர்த்தும் முறையினையும் சான்று காட்டி நிறுவுக.
47. உரிச்சொற்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

---